**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C .C. No:99/2022**

**Dated: 26.05.2026**

**Deposition of Witnesses for PW - 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.அழகர்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1-வது எதிரி இறந்து விட்டார். 2-வது எதிரி ஆஜர். 3-வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

(சாட்சி காணொலி காட்சி மூலம் விசாரணை செய்யப்பட்டார்)

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மாநகரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த சிவகங்கை மாவட்டம் இளையான்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது சார்பு ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் 57 அறிக்கையுடன் எதிரிகள் முகம்மது இப்ராகிம், மசுத் அலி ஆகியோருடன் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 1.100 கிகி கஞ்சா மற்றும் பணம் ரூ.2,680/- மற்றும் இருசக்கர வாகனம் TN 63 DA 6418 Yamaga மற்றும் TN 63 BE

1903 என்னிடம் ஆஜர் செய்தார். அவர் சமர்ப்பித்த NDPS Act-ன்படியான 57ன்படியான அறிக்கை அதசாஆ.8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 02.09.2021-ம் தேதி 13.30 மணிக்கு இளையான்குடி காவல் நிலைய குற்ற எண்.376/2021 சட்ட பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act-ன்படி வழக்கு பதிவு செய்தேன். சாட்சிகளாகிய சார்பு ஆய்வாளர் பாலமுருகன், சிறப்பு சார்பு ஆய்வாளர் மகாலிங்கம், காவலர் மலையரசன், காவலர் சுந்தர், காவலர் முனியாசி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரிகள் மற்றும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு 03.02.2022-ம் தேதி தலைமை காவலர் அழகுபூபதி மூலமாக மாதிரிக்கு எடுக்கப்பட்ட 50 கிராம் மாதிரி கஞ்சாக்களை 1 கிலோ கஞ்சா பணம் ரூ.2,680/- மற்றும் இருசக்கர வாகனத்தையும் இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து RP No.33/2022 பெற்றேன். அதற்கான **படிவம் 95 அதசாஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே ராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். அங்கிருந்து வரப்பெற்ற பகுப்பாய்வு அறிக்கை பெற்று அந்த பகுப்பாய்வு அறிக்கையை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதற்கான **பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.பின்பு 26.04.2022-ம் தேதி தலைமை காவலர் அழகுபூபதி பகுப்பாய்வு அறிக்கை வழங்கிய அறிவியல் அலுவலர் கோவிந்ராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றும் பகுப்பாய்வு அறிக்கையினை பெற்றேன். பின்பு எதிரிகள் மீது வழக்கு கோப்பினை பரிசீலித்தும் ஆவணங்களின் அடிப்படையில் NDPS சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act-ன்படி வழக்கிட்டுள்ளதில் சட்டபிரிவு மாறுதல் செய்தும் 8(c) r/w 20(b)(ii)(B), 25 of

NDPS Act-ன்படி சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை செய்தேன். அதற்கான **சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அதசாஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எனது புலன் விசாரணை முடித்தும் சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகள் மீது 8(c) r/w 20(b)(ii)(B), 25 of NDPS Act-ன்படி 26.04,2022-ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எதிரிகளிடமிருந்து கஞ்சா கடத்த பயன்படுத்திய **இருசக்கர வாகனம் (எண்ணிகை 2) சாபொ.1, 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **கஞ்சா விற்ற பணம் ரூ.2,680/- சாபொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதித்துறை நடுவர் சான்றொப்பம் செய்த சொத்து விவர பட்டியல் **Annexure I அதசாஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதித்துறை நடுவர் சான்றொப்பம் செய்த சொத்து விவர பட்டியல் **Annexure II அதசாஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதித்துறை நடுவர் சான்றொப்பம் செய்த **புகைப்படங்கள் (எண்ணிக்கை 4) அதசாஆ.14 வரிசை** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பகுப்பாய்வுக்கு பயன்படுத்தப்பட்டு மீதமுள்ள கஞ்சா இந்நீதிமன்ற உத்தரவுப்படி Drugs disposal Committee மூலம் அழிக்கப்பட்டது. அதற்கான CRlmp No.721/2025 Dt.01.03.2025 அதற்கான **CRlmp No.721/2025 உத்தரவு நகல் அதசாஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் கஞ்சாவினை அழிப்பதற்கு முன்பாக எடுக்கப்பட்ட CS1 **Sample ganja சாபொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**2,3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பந்தமாக சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மனைக்கட்டுகளாக பிரிக்கப்பட்ட பகுதி

என்றால் சரிதான். மேற்படி பிளாட்டில் எந்த பிளாட் முன்பு சம்பவம் நடந்ததாகவும் எதிரிகளிடமிருந்து பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் குறிப்பிட்டு இடம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக 1-வது எதிரிக்கும் 2, 3 எதிரிகளுக்கும் இடையே உள்ள தொடர்புகள் குறித்து எந்த விசாரணையும் செய்யவில்லை என்றும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 03.02.2022-ம் தேதி வழக்கு சொத்துக்கள் யார் பொறுப்பில் இருந்தது என்று காண்பிக்கக்கூடிய குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 5 மாத காலதாமதமாக சான்று பொருட்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1-வது எதிரிக்கும் 2, 3 எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக கஞ்சா பையில் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது அந்த பையினை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது குறித்து நான் எந்த விசாரணையும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 2-வது எதிரி மசுத்அலியை கைது செய்தது சார்பு ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் ஆவார். கைது குறிப்பாணையில் எதிரியை கைது செய்துள்ளேன் என்று நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கைது குறிப்பாணையில் எதிரி மசூத் அலியிடமிருந்து பணமோ, பொருளோ கைப்பற்றப்பட்டதாக கைது குறிப்பாணையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த **கைது குறிப்பாணை எமசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3-வது எதிரியை குறித்து தப்பி ஓடியதாக அங்க வச்ச அடையாங்கள் எதுவும் ஆவணங்களில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2, 3-வது எதிரிகளை விசாரித்து எந்த வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரிதான். 1-

வது எதிரிக்கும் 2, 3 எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. 2, 3 எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். 2, 3 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் அதனால் தான் எந்தவித ஆவணங்களோ, சாட்சிகளோ 2, 3 எதிரிகளுக்குள்ள தொடர்பு குறித்து ஆவணங்களில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் 2, 3 எதிரிகள் மீது இவ்வழக்கில் தொடர்புபடுத்தி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:-**

**இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.